1986 மே 3]

திரு. ஆர். ரெங்கசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, தமிழக சிமெண்ட் கார்ப்பரேஷன் மூலமாக மதுரையில் ஒரு சிமெண்ட் ஆலையை ஆரம்பிக்கும் ஒரு ப்ரபோசல் இருக் கிறதே, அது எந் நிலையில் இருக்கிறது என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, நான் இதை மானியக் கோரிக்கையிலே எடுத்துச் சொன்னேன். அது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது.

திரவ நைட்ரஜன் தொழிற்சாலை.

612 — (* வினா எண் 5009-ஏ) **திரு. க. வெ. வீரானம்பலம் :** மாண்புமிகு தொழிற் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டத்தில் திரவ நைட்ரஜன் தொழிற்சாலை ஏற்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இல்லை.

டை ஆக்ஸைடு தொழிற்சாலை.

613—(* வினா எண் 5533) **திரு. மா. சுந்தரதாஸ் :** மாண்புமிகு தொழிற் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தமிழகத்தில், குமரி மாவட்டத்தில் உள்ள கடலோரப் பகுதிகளில் கிடைக்கும் இலுமினெட்டில் இருந்து டை ஆக்ஸைடு (Titanium Di-oxide) தயாரிக்கும் தொழிற்சாலை துவங்க அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், துவக்கப் பணிகள் எப்போது துவங்கப் பெறும் ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.